பிரசார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**15 10 2026** **THURSDAY** **6.30 PM**

## மாநிலச்செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

**1)** ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் சாதனை படைத்து இந்திய வீரர்கள் நாட்டுக்கு பெருமை சேர்த்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

**2)** மாலத்தீவு கடலோர காவல் படையினரால் கைது செய்யப்பட்டுள்ள **25** தமிழக மீனவர்களை விடுவிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முதலமைச்சர் திரு விஜய் வலியுறுத்தியுள்ளார்.

**3)** கூட்டுறவு அங்காடிகளில் குறைந்த விலையில், ஒரு லட்சம் மெட்ரிக் டன் அரிசி படிப்படியாக விற்பனை செய்யப்படும் என்று மாநில உணவு அமைச்சர் திரு வெங்கடரமணன் தெரிவித்துள்ளார்.

**4)** வடகிழக்கு பருவமழை தொடங்கியுள்ள நிலையில், நீலகிரி, கோவை உள்ளிட்ட **9** மாவட்டங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

**5)** சோலாப்பூர் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் **Adil Kalyanpur** — ஜப்பானின் **Ryuki Matsuda** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<<>>>>>>

ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் சாதனை படைத்து இந்திய வீரர், வீராங்கனைகள் நாட்டுக்கு பெருமை சேர்த்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் உள்ள மேஜர் தியான்சந்த் தேசிய மைதானத்தில் இன்று மாலை நடைபெற்ற நிகழ்ச்சியில், இப்போட்டியில் பங்கேற்ற விளையாட்டு வீரர்களுடன் கலந்துரையாடிய அவர், பதக்கங்கள் வென்று தேசியக்கொடிக்கு பெருமை சேர்த்துள்ளதாக கூறினார்.

இந்த விளையாட்டுப் போட்டியில் நமது வீரர்கள் படைத்த சாதனை 140 கோடி மக்களுக்கு மகிழ்ச்சி அளித்ததாக அவர் தெரிவித்தார்.

அனைத்து வீரர், வீராங்கனைகளுக்கும், பயிற்சியாளர்களுக்கும், குடும்பத்தினருக்கும் வாழ்த்து தெரிவிப்பதாக அவர் கூறினார்.

முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ பி ஜே அப்துல் கலாமின் பிறந்த நாள் இன்று கொண்டாடப்படுவதை சுட்டிக்காட்டிய பிரதமர், அவரது வாழ்க்கை நமக்கு ஊக்க சக்தியாக இருப்பதாக தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

மாலத்தீவு கடலோர காவல் படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தூத்துக்குடி மாவட்டத்தை சேர்ந்த 25 தமிழக

மீனவர்களை விடுவிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முதலமைச்சர் திரு விஜய் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கருக்கு, இன்று அவர் எழுதியுள்ள கடிதத்தில் இந்த மீனவர்களின் 3 மீன்பிடி விசைப்படகுகளையும் மீட்க தேவையான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

தூத்துக்குடி மாவட்டத்தை சேர்ந்த இந்த மீனவர்கள் நேற்று முன்தினம் அதிகாலையில் மாலத்தீவு கடலோர காவல்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுதொடர்பாக, மாலத்தீவு அரசுடன் தூதரகம் வாயிலாக பேச்சு வார்த்தை நடத்தி, கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்விவகாரத்தில் தலையிட்டு தக்க நடவடிக்கை மேற்கொள்வது பாதிக்கப்பட்ட மீனவர்களின் குடும்பத்தினருக்கும், ஒட்டுமொத்த மீனவ சமூகத்திற்கும் மிகுந்த நம்பிக்கையையம், ஆறுதலையும் அளிக்கும் என்று திரு விஜய் அந்த கடிதத்தில் கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>>>

தமிழகத்தில் கூட்டுறவு அங்காடிகளில் குறைந்த விலையில், ஒரு லட்சம் மெட்ரிக் டன் அரிசி படிப்படியாக விற்பனை செய்யப்படும் என்று மாநில உணவு அமைச்சர் திரு வெங்கடரமணன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், விலைவாசி உயர்வை கருத்தில்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

*(Sound Byte — வெங்கடரமணன் - 38 Sec.)*

<<<<<<<>>>>>>

தமிழகத்தில் பால் கொள்முதல் தற்போது நாளொன்றுக்கு ஒரு லட்சத்து 90 ஆயிரம் லிட்டராக உயர்ந்துள்ளதாக மாநில பால்வளத்துறை அமைச்சர் திருமதி விஜயலட்சுமி தெரிவித்துள்ளார்.

திருச்சி மாவட்டம் கொட்டப்பட்டு ஆவின் நிறுவனத்தில் இன்று ஆய்வு மேற்கொண்டபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பால் கொள்முதல் மூன்றரை லட்சம் லிட்டராக மேலும் அதிகரிக்கும் என்று கூறினார்.

ஆவின் பொருட்கள் விலை உயராது என்று தெரிவித்த அவர், தீபாவளி பண்டிகைக்கான இனிப்புப் பலகாரம் குறித்த பட்டியல் விரைவில் வெளியிடப்படும் என்று கூறினார்.

ஆவின் பால் தட்டுப்பாடு குறித்த புகார்கள் சரிசெய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

காவிரி டெல்டா மாவட்டங்களை வறட்சி பாதித்த பகுதிகளாக தமிழக அரசு அறிவிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், மேட்டூர் அணையிலிருந்து திறந்துவிடப்பட்ட தண்ணீர் கடைமடைப் பகுதிகளுக்கு வந்து சேராமல் சம்பா பயிர்கள் காய்ந்து வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

இதனால் உணவு உற்பத்தி பாதிக்கப்பட்டு, விலைவாசி மேலும் உயரும் அபாயம் ஏற்படும் என்பதை சுட்டிக்காட்டியுள்ள திரு உதயநிதி ஸ்டாலின், விவசாயிகளுக்கான நிவாரண உதவிகளை மாநில அரசு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<<<>>>>>>

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை இன்று தொடங்கியுள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Btye — வி ஆர் துரை (1) - 29 Sec.)***

நீலகிரி, கோவை, தேனி உள்ளிட்ட 9 மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்று டாக்டர் வி ஆர் துரை தெரிவித்தார்.

***(Sound Btye — வி ஆர் துரை (2) - 38 Sec.)***

<<<<<<<>>>>>>

இதனிடையே, வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள தயார் நிலையில் இருக்க வேண்டும் என்று மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு ஆனந்த், அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

கோவை கொடிசியா வளாகத்தில் வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்வதற்கான முன்னேற்பாடுகள் குறித்து இன்று நடைபெற்ற மண்டல மாநாட்டில் பேசிய அவர், கிராமங்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதில் அதிகாரிகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

பருவமழையை எதிர்கொள்வதற்கான முன்னெச்சரிக்கைப் பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

வளர்ச்சிப்பணிகளை செயல்படுத்துவதில் அலுவலர்கள் எவ்வித சமரசத்திற்கும் இடமளிக்கக் கூடாது என்று திரு ஆனந்த் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ பி ஜே அப்துல் கலாமின் பிறந்த தினத்தையொட்டி, ராமநாதபுரம் மாவட்டம் பேய்கரும்பில் உள்ள அன்னாரது நினைவிடத்தில மாநில அமைச்சர் திரு மதன்ராஜா மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

--------------

காஞ்சிபுரம் மாவட்டத்தில் கூட்டுறவு வங்கி மற்றும் அனைத்து கூட்டுறவு நிறுவனங்கள் சார்பில் நடைபெறும் கடன் திட்டங்களுக்கான சிறப்பு முகாம்களில் பொதுமக்கள் பங்கேற்று பயன்பெறுமாறு ஆட்சியர் திருமதி சினேகா கேட்டுக்கொண்டுள்ளார்.

------------------

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு அருகே உள்ள முதியோர் இல்லத்தில், மத்திய அரசின் முதியோர் நல மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், விழிப்புணர்வு பயிற்சி இன்று நடைபெற்றது.

-----------------

மத்திய அரசின் மானியத்துடன் செயல்படுத்தப்படும் சூரிய மின்சக்தி திட்டம் குறித்த விழிப்புணர்வு கண்காட்சி அரியலூரில் நடைபெற்றது.

------------------

தேசிய அஞ்சல் வாரத்தையொட்டி, திருவள்ளூர் மாவட்டம் அம்பத்தூர் தலைமை அஞ்சலகம் சார்பில், கடிதம் எழுதுவதன் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில், மாணவர்களிடையே விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

--------------

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் ஆட்சியர் திரு.சிவ கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நாளை நடைபெறவுள்ளது.

--------------------

ராணிப்பேட்டை மாவட்டம் மாம்பாக்கத்தில் மக்கள் தொடர்பு திட்ட முகாம், மாவட்ட வருவாய் அலுவலர் சரவணன் தலைமையில் இன்று நடைபெற்றது.

<<<<<<<>>>>>>

சோலாப்பூர் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் **Adil Kalyanpur** — ஜப்பானின் **Ryuki Matsuda** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, **6-2, 6-3** என்ற செட் கணக்கில், தாய்லாந்தின் **Thanapet Chanta** — **Pawit Sornlaksup** இணையை வென்றது.

இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் திக் விஜய் பிரதாப் சிங், **Prajwal Dev, Karan Singh, Sidharth Rawat** ஆகியோர் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

-----------

மதுரை மாவட்ட விளையாட்டு அரங்கில் **14** முதல் **19** வயதுக்கு உட்பட்ட மாணவர்களுக்கான குடியரசு தின தடகள போட்டிகளை ஆட்சியர் திரு நிஷாந்த் கிருஷ்ணா இன்று தொடங்கிவைத்தார்.

**<<<<<<<END>>>>>>**